அக்டோபர் 2004 அரசு-1 மகுடம்-9 விலை: ரூ.10/-



# ஜோதிட அரசு

64 பக்கங்களுடன்

ஜோதிட ஆன்மீக மாத இதழ்



- பிரம்ம தேச ஸ்தல பெருமை

அக்டோபர் மாத ராசிபலன்

- ஆலய நிர்ணய யோகம்

இராணுவப் பணி கிடைக்குமா?

நல்ல பசுவின் அடையாளம்

பிரம்மேந்திரரின் அற்புதங்கள்



# திருமணப் பொருத்தத்தில் பாப சாம்யம்

திருமணப் பொருத்தத்தில் முக்கியத்துவம் கொடுப்பது பாபசாம்யம் ஜாதகத்திலும் பெண்ணின் ஜாதகத்திலும், பாப சாம்யம் கணக்கிடப்படுகிறது. இந்த பாப: சாம்யம் பாபகிரகமான சூரியன், செவ்வாய், சனி, ராகு, கேது ஆகிய கிரகங்கள் லக்கனத்திற்கு ராசிக்கு சுக்கிரனுக்கு 1,2,4,7,8,12ல் இருந்தால் பாபம் கணக்கிடப்படுகிறது.

திருமணப் பொருத்தந்தில் பாபம் கணக்கிடப்படும் பொழுது ஜோதிடர்களுக்குள் பாபம் பார்க்கும் முறை வித்தியாசப் படுகின்றது. பெண் வீட்டார் பார்த்த ஜோதிடர்க்கும் மாப்பிள்ளை வீட்டார் பார்த்த ஜோதிடர்க்கும் பாப சாம்யம் வித்தியாசமும், கருத்து வேறுபாடுகளும் தோன்றலாம். இதற்கு காரணம் பாபம் பார்க்கும்பொழுது பாப கிரகங்கள் 1,7,8,ல் இருந்தால் ஒரு பாபமாக ஓர் மொட்டையான கணக்கை வைத்து கொள்வதே காரணமாகும். பாப கிரகங்கள் பெரும்பாலானோர் கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை. உதாரணமாக இந்த அட்டவணையில் ராகு உச்சம் பெற்ற இடமான விருச்சிகம் 96 தொகையும் நீசம் பெற்ற இடமான ரிஷபத்தில் 196 தொகையும் உள்ளது. இதனை பார்க்கும்பொழுது ஓர் பாப கிரகம் தனது உச்ச வீட்டில் இருக்கும்பொழுது பாப தன்மை குறைவாகவும், நீசம், பகை வீட்டில் இருக்கும்பொழுது அதிகமாவும் பாப அதிகமாவும் கணக்கிடப்பட வேண்டும். இதுவே முறை இந்த முறையை ஜோதிடர்களும் ஜோதிட வாசகர்களும் பின்பற்றினால் பாபம் பார்ப்பதில் குழப்பங்கள் ஏற்படாது.



பாபம் எதற்காக பார்க்கப்படுகின்றது? பாபம் அதிகம் உள்ள ஜாதகர்க்கு ஆயுள் அதிகரிக்கும். எனவேதான் மாப்பிள்ளையின் ஜாதகத்தை விட பெண்ணின் ஜாதகத்தில் கால் பாபமாவது குறைவாக இருக்க வேண்டும். பாப சாம்யம், புத்திர

| பாபிகள் | நீசம் | உச்சம் | மூலதிரிகோ | பகை | ஆட்சி சமன் | நட்பு |
|---|---|---|---|---|---|---|
| சூரியன் | துலாம் | மேஷம் | சிம்மம் | ரிஷபம் மகரம் கும்பம் | மிதுனம் கடகம், கன்னி | கடகம், தனுசு, மீனம் |
| லக்கனத்திற்கு 1,7,8 2,4,12 | 64 16 | 48 12 | 36 9 | 56 14 | 32 8 | 16 4 |
| செவ்வாய் 1,7,8-ல் 2,4,12 | கடகம் 192 48 | மகரம் 144 36 | மேஷம் 108 27 | மிது. கன்னி 168 42 | மே,ரிஷப துலா,விரு 96 24 | ரிஷபம், மிதுன மீனம் 48 12 |
| சனி 1,7,8 2,4,12 | மேஷம் 128 32 | துலாம் 96 24 | கும்பம் 72 18 | கடகம் விருச்சிகம் 112 28 | தனுசு,மகர மீனம் 64 16 | ரிஷபம்,மிதுனம், கன்னி 32 8 |
| ராகு,கேது 1,7,8 2,4,12 | ரிஷபம் 128 32 | விருச்சிக 96 24 | கும்பம் 72 18 | மே,கடக சிம்மம் 112 28 | தனுசு மீனம் 64 16 | மிதுனம்,கன்னி, துலாம் 32 8 |

பாக்யத்திற்கும் தம்பதிகள் ஒற்றுமைக்கும் பார்க்கப்படுகின்றது. (அனுபவ ஜோதிடத்தில் பாபம் அதிகமாக உள்ள பெண்களே அதிகமான கல்வியையும், பட்டத்தையும் பெறுகின்றனர். இந்த பாப சாம்ய அட்டவணை இதுவரை எந்த ஜோதிட இதழிலும் பிரச்கரம் ஆகவில்லை என்பது குறிப்பிடதக்கது. (ஜோதிட அரசு இதழ் வாசகர்கள் நலன் கருதி 'வெளியிடப்படுகிறது).

## அட்டவணை பார்க்கும் முறை

லக்கனத்திற்கு பார்க்கும் பொழுது அட்டவணையில் உள்ள முழு தொகையையும், ராசிக்கு பார்க்கும்பொழுது அட்டவணையில் உள்ள தொகைக்கு பாதியையும் சுக்கிரனை லக்கனமாக வைத்து பார்க்கும்பொழுது அட்டவணையில் உள்ள தொகைக்கு கால் பகுதியையும் கணக்கிட வேண்டும்: லக்கனம் மற்றும் சந்திரா லக்கனம், சுக்கிரன் முறையும் கணக்கிடப்பட்ட தொகையை கூட்டி மொத்தத்தை 128ல் வகுக்க வேண்டும். வரும் ஈவும், மிச்சமும் பாபம் ஆகும்.

பாபம் நிர்ணயம் செய்யும்பொழுது பாப கிரகத்தை குரு பார்க்குமேயானால் பாபத்தில் கால்பங்கு குறைத்து கொள்ளலாம்.

"ஜோதிஷமணி"

**S. சங்கரசுப்பிரமணியன் D.A., M.A.,**

26, சன்னதித்தெரு, சி.என்.கிராமம்,

திருநெல்வேலி ஜங்சன் - 627 001. போன் : 332462

## தமிழ்ப்புத்தாண்டு பலன்கள்

| | | |
|---|---|---|
| ஞாயிறு | - | மழை குறைவாகப் பெய்யும் |
| திங்கள் | - | அதிக வெள்ளம், சேதம் |
| செவ்வாய் | - | கலகம் சம்பவிக்கும் |
| புதன் | - | வறண்ட காற்று வீசும் |
| வியாழன் | - | சுபிட்சம் உண்டாகும் |
| வெள்ளி | - | பெருத்த மழை பெய்யும் |
| சனி | - | மழை சொற்பமே |

● காயல் **V. நயினார்**

## வாசகர்கள் கவனத்திற்கு!

'ஜோதிட அரசு' இதழின் ஆண்டுச் சந்தா ரூ. 120 எங்கள் சொந்த தபால் செலவில் எமது பத்திரிக்கை உங்கள் வீடு தேடி வரும். சந்தா தொகையை M.O. (or) D.D. மூலம் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பவும்.

**VISAL PUBLICATION,**

278, Gnanagiri Nagar, Sivakasi - 626 189.